# மரபுசாரா மின் உற்பத்தி: அமைச்சர் பழனியப்பன் விருப்பம்

சென்னை, அக். 20-

''மரபுசாரா முறையில், குறைந்த செலவிலான மின் உற்பத்தி திட்டங்களை வகுக்க, ஆராய்ச்சியாளர்கள் முன் வர வேண்டும்,'' என, உயர்கல்வி துறை அமைச்சர், பழனியப்பன் வேண்டுகோள் விடுத்தார்.

**விருது**

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றம் சார்பில், 'தமிழ்நாடு விஞ்ஞானி விருது' வழங்கும் விழா நடந்தது. வேளாண் அறிவியல், சுற்றுப்புற அறிவியல், வேதியியல், உயிர் அறிவியல், மருத்துவம் உள்ளிட்ட துறைகளில், சாதனை புரிந்தவர்களுக்கு, 'தமிழ்நாடு விஞ்ஞானி விருது - 2010, 2011' விருதுகள் வழங்கப்பட்டன.

**இயற்கை**

விருதுகளை வழங்கி, உயர்கல்வி துறை அமைச்சர் பழனியப்பன் பேசியதாவது:

முன்பெல்லாம், மாணவர்கள் உயர்கல்வி முடித்து, ஆய்வில் அதிகம் ஈடுபடுவர். தற்போது, இந்த நிலை மாறி உள்ளது. ஆய்வு சிந்தனை குறைந்து வருவதால், ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகிறது.



■ சென்னை, அப்பல்லோ மருத்துவமனை டாக்டர் சத்தியமூர்த்திக்கு, அமைச்சர் பழனியப்பன் விருது வழங்கினார். அருகில், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் காளிராஜ்.

ஒவ்வொரு நாளும் இயற்கைக்கு மாறான முயற்சிகளில் ஈடுபடுகிறோம். இதன் காரணமாக, யானை உள்ளிட்ட காட்டு விலங்குகள், நகருக்குள் வருகின்றன.

இந்த விலங்குகள் இயற்கையோடு வாழும் திட்டங்களை, அறிவியலாளர்கள் உருவாக்க வேண்டும்.

**ஆராய்ச்சியாளர்கள்**

மரபு சார்ந்த முறையில், மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பல இன்னல்களுக்கு இடையே, இந்த முறையை பின்பற்றி வருகிறோம்.

இதை தவிர்த்து, மரபுசாரா முறையில், குறைந்த செலவிலான மின் உற்பத்தி திட்டங்களை உருவாக்க, ஆராய்ச்சியாளர்கள் முன் வர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மருத்துவத்தில், நீரழி நோயால் ஏற்படும் இதய பாதிப்பு மற்றும் போதைப் பொருள் உட்கொள்வதால் ஏற்படு இதய பாதிப்பு குறித்து ஆய்வு செய்த, டாக்ட சத்தியமூர்த்தி உட்பட, பேருக்கு, விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்களை அமைச்சர் பழனியப்ப வழங்கினார்.

தொழில்நுட்ப கல் ஆணையர் ரமேஷ் சந் மீனா, அண்ணா பல்கலை துணைவேந்தர் காளிரா உட்பட பலர் பங்கேற்றனர்